# மக்களைக் கட்டியெழுப்புபவர்கள் (4:29-32)

*டெக்ஸாஸின் அர்லிங்டனில் பல ஆண்டுகளாகத் திட்டமிடுதல் மற்றும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்குப் பிறகு சமீபத்தில் ஒரு பேஸ்பால் விளையாட்டுப் பூங்காவானது திறக்கப்பட்டது. ஒரு சில வாரங்களுக்கு முன்பு வரையிலும் பழைய விளையாட்டுப் பூங்காவானது புதிய பூங்கா விற்கு அருகில் நின்றிருந்தது. கடைசியில் அது (பழைய பூங்கா) இடித்து வீழ்த்தப்பட்ட பொழுது, அதன் கட்டுமானப் பகுதிகளில் கடைசியாக வீழ்த்தப்பட்ட பகுதியானது விழுகின்ற போது எடுக்கப்பட்ட புகைப்படம் செய்தித் தாளில் வெளியாயிற்று. இது எனக்கு வாழ்வின் அடிப்படைக் கொள்கையொன்றை நினைவூட்டியது: ஒன்றைக் கட்டியெழுப்ப ஆகும் கால அளவை விட அதை இடித்துத் தள்ளுவதற்குக் காலம் அதிகம் தேவைப் படுவதில்லை.*

*இந்த சத்தியத்தைத் தேவன் நமக்கு, பவுலினால் எழுதப்பட்ட பின்வரும் வசனங்களின் மூலம் நினைவூட்டுகின்றார்:*

> *கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங் கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (4:29-32).*

*சபையானது, மக்களைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

*நமது வேத வசனப் பகுதியான 4:29-32, இயேசுவைப் போலிருத்தல் மற்றும் மக்களைக் கட்டி எழுப்புகின்றவர்களாகுதல் ஆகியவற்றின் இன்றி யமையாத (பின்வரும்) இரு பகுதிகளின் மீது கவனம் செலுத்துகின்றது: நமது வார்த்தைகள் மற்றும் நமது செயல்கள்.*

# மக்களைக் கட்டி எழுப்பும் வார்த்தைகள்

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் நமது வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். "கெட்ட வார்த்தையிலிருந்து" (4:29அ) விலகியிருத்தல் என்பது நமது வார்த்தைகள்/பேச்சைக் காத்துக் கொள்ள நாம் ஈடுபடும் ஒரு வழிமுறையாகும். "கெட்ட" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது அழுகிப்போன அல்லது கெட்டுப்போன உணவைக் குறித்து விவரிப் பதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஒரு சில வாரங்களுக்கு முன்பாக உள்ளூர் சபையின் உணவு உதவி ஊழியக் குழுவானது ஒரு உணவு வங்கியில் இருந்து பழங்கள் சிலவற்றைப் பெற்றது. அதைத் தேவையில் உள்ளவர்களுக்கு விநியோகிப்பதற்காகத் தன்னார்வப் பணியாளர்கள் தயார் செய்கையில், அந்தப் பழங்களில் அதிகமானவற்றின்/பெரும்பாலானவற்றின் தண்டின் அருகே பூஞ்சைக் காளானின் துணுக்கு இருந்ததை யாரோ ஒருவர் கவனித்தார். அது நன்கு கவனித்தால் மட்டுமே காணக் கூடியதாயிருந்தது. அந்த பீச் பழங்களில் ஒன்றைத் தன்னார்வப் பணியாளர்களில் ஒருவர் வெட்டி அதனுள்ளாகப் பார்த்த பொழுது, அது முற்றிலும் காளான் படிந்திருந்ததைக் கண்டார். எல்லாப் பழங்களும் அழுகிப் போயிருந்தன.*

*நம்மில் எவரும் அழுகிப் போன கனியை நமது வாயில் இட்டுக் கொள்வதை விரும்ப மாட்டோம். அதைப் பற்றி நினைப்பதே நம்மை நோயில் ஆழ்த்துவதாக உள்ளது; ஆனால் தேவனுடைய கண்ணோக்கத்தில் நாம் அடிக்கடி நம் வாயில் அழுகிப் போனவை இருக்கும்படி அனுமதிப் பவர்களாய் இருக்கின்றோம். யாரேனும் ஒருவர் ஆபாச நகைச்சுவையைக் கூறும்பொழுது, சிரிப்பதற்காக கெட்ட வார்த்தைகளை அர்த்தப்படுத்திக் கூறும்பொழுது, ஒரு பொய் கூறும்பொழுது அல்லது கிசுகிசுப்பைப் பரவ விடும்பொழுது, அவர் தம் வாயில் அழுகிப்போன பொருள் இருக்க அனு மதிக்கின்றார்.*

*நமது வார்த்தைகள் எவ்விதமானவைகளாய் இருக்க வேண்டும்? பவுலினால் அளிக்கப்படுகின்ற மூன்று வழிகாட்டுதல்களைக் கவனியுங்கள். முதலாவது, நமது வார்த்தைகள் கட்டியெழுப்ப வேண்டும். நாம் "பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளை"(4:29ஆ)ப் பேச மட்டுமே சுயாதீனம் பெற்றவர்களாய் இருக்கின்றோம். கிறிஸ்தவர்கள் மற்றவர்களிட மிருந்து மிகச் சிறந்தவற்றை வெளிக்கொண்டு வரக் கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.*

*இரண்டாவது, நமது வார்த்தைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கவைகளா யிருக்க வேண்டும். அவைகள் "காலத்தின் பிரயோஜனத்தின்படி" பேசப்பட வேண்டும் (4:29இ). நாம் நமது வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கையில் எப்பொழுதும் பிறருடைய மிகச் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.*

*மூன்றாவது, நமது வார்த்தைகள் கிருபை பொருந்தினதாக இருக்க வேண்டும். பிறருடனான நமது வாய்மொழிச் செய்தித் தொடர்பிற்கு நோக்கம் ஒன்றை வேதாகமம் தருகின்றது: "பக்திவிருத்திக்கு ஏதுவான"*

*(4:29இ). நாம் பேசுகின்ற வார்த்தைகளின் மூலமாகத் தேவன் பிறருடைய வாழ்வில் தம்முடைய கிருபையை ஊற்றுகின்றார். சாலொமோன், "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25:11) என்று கூறினார்.*

*உங்கள் வார்த்தைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் உள்ளன? பரிசுத்த ஆவியானவரின் உணர்வெழுச்சிகளைச் சித்தரிப்பில் கொண்டு வருவதற்குப் பவுல் செயல்பட்ட வகையில் இதைக் குறித்து நாம் ஒளியூட்டப்பட அவர் நமக்கு உதவினார்: "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'' (4:30). பல்வேறு செயல்பாடுகள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகின்றன. அவைகளில் ஒன்றாக உள்ளது, அவர் நிலைநிற்கிற ஒவ்வொன்றிற்கும் எதிராகச் செல்லுகின்ற கெட்ட வார்த்தைகளாக உள்ளன. நமது வார்த்தைகளைக் கவனித்தல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது.*

*உங்கள் கணவரிடத்திலோ அல்லது உங்கள் மனைவியிடத்திலோ உற்சாகமூட்டும் வார்த்தைகளை மட்டுமே நீங்கள் பேசுவதென்று முடிவெடுத்தால், அது உங்கள் திருமண வாழ்வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்? உற்சாகமூட்டும் வார்த்தைகள் என்ற நிலையான ஆகார மானது உங்கள் குழந்தைகளுக்கு எதைச் செய்யும்? உள்ளூர் சபையொன்றில் இருக்கின்ற உறுப்பினர்கள் யாவரும் பிறரை இடித்து வீழ்த்தும் "அழுகிப் போன'' வார்த்தைகளைக் கூறுவதைத் தவிர்த்து, ஒருவர் பிறரைக் கட்டியெழுப்பும் வார்த்தைகளை மட்டுமே கூறினால் அது சபையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்?*

## மக்களைக் கட்டி எழுப்பும் செயல்பாடுகள்

*நமது பேச்சுக்களுடன், நமது செயல்பாடுகளும் கூட மக்களைக் கட்டியெழுப்ப வேண்டும். இது பிறரிடத்தில் நேர்மறையாகச் செயல் படுவதை உள்ளடக்குவது மட்டுமின்றி, பிறரிடத்தில் எதிர்மறையாகச் செயல்பட மறுப்பதையும் உள்ளடக்குகின்றது.*

*எதிர்மறையான செயல்பாடுகளைத் தவிர்த்து விடுங்கள். மக்களைத் துன்புறுத்துகின்ற எந்த விதமான எதிர்மறைச் செயல்பாடுகளையும் கிறிஸ்தவர்கள் நீக்கிப் போட்டு விட வேண்டும். 4:31ல் பவுல் எதிர் எச்சரிக்கை செய்துள்ள செயல்கள் மற்றும் எண்ணப்போக்குகளின் பின்வரும் அட்டவணையைக் கவனியுங்கள்:*

1. *"கசப்பு" –*
   *ஒரு நபர் பிறரைக் குறித்து எரிச்சல் அடையும்படி செய்கின்ற முரட்டுத்தன்மை*
2. *"கோபம்" –*
   *மக்களை நோக்கிய கோபத்தின் திடீரென்ற வெடிப்பு*
3. *"மூர்க்கம்" –*

யாரேனும் ஒருவரிடத்தில் நீண்ட காலமாக ஆழ்ந்து வேரூன்றிய விரோதம் பாராட்டுதல்

4. "கூக்குரல்" –
   பிறரிடத்தில் கோபமாக உரத்துப் பேசுதல்
5. "தூஷணம்" –
   பிறருடைய நற்பெயரைக் குலைக்கும் வகையில் வதந்திகளைப் பரப்புதல்
6. "துர்க்குணம்" –
   யாரேனும் ஒருவரைத் துன்புறுத்துவதற்கென்று செய்யப்படும் முயற்சி

நீங்கள் உங்கள் வீட்டை ஒருக்காலும் தூய்மைப்படுத்தாமல் இருந்தால், அது அழுக்காக அல்லது அசுத்தம் நிறைந்ததாக ஆகிவிடுகின்றது. ஒரு வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் என்பது அதில் அசுத்தங் களை நீக்குதல் என்று அர்த்தப்படுகின்றது. சில செயல்கள் நம்மை மாசு படுத்தி விடாதபடிக்கு அவற்றை நாம் நீக்கிப் போட வேண்டும் என்று பவுல் நமக்குக் கூறினார்.

நேர்மறையான செயல்பாடுகளை மேற்கொள்ளுங்கள். தவிர்க்க வேண்டிய எதிர்மறையான செயல்பாடுகளைப் பட்டியலிட்ட பிறகு பவுல், நாம் மேற்கொள்ள வேண்டிய நேர்மறையான செயல்பாடுகளாகப் பின்வரும் மூன்று செயல்பாடுகளை அளித்தார்:

1. "தயவாயிருத்தல்" –
   பிறருக்கு மிகச் சிறந்தவற்றையே நினைத்து, அவர்களிடமிருந்து மிகச் சிறந்தவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு உங்களால் இயன்ற ஒவ்வொன்றையும் செய்தல்.
2. "மன உருக்கமாயிருத்தல்" –
   பிறருடைய தேவைகள் குறித்துத் திறந்த மனதுடனும், பதில்செயல் புரியும் தன்மையுடனும் இருத்தல்.
3. "மன்னிப்பவர்களாய் இருத்தல்" –
   தேவன் உங்களுடைய தவறுகளை எவ்விதம் நடத்த வேண்டுமென்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அவ்விதமாகவே நீங்களும் மற்றவர்களின் தவறுகளை நடத்துதல்.

ஜார்ஜ் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர், தன்னைத் தவிர மற்ற யாவரும் காதுகேளாதவர்களாய் இருந்த ஒரு குடும்பத்தில் பிறந்தார். அவர் தம் குடும்பமானது தனக்கு "பிறந்தநாள் வாழ்த்து" பாடியதை ஒருக்காலும் கேட்டதில்லை. அவர் விளையாட்டுக்களை விளையாடுகையில் அவருக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அவரது தந்தையார் உரக்கக் கூவியதை அவர் ஒருக்காலும் கேட்டதில்லை. அவர் ஏதோ ஒரு வகையில் தமது பெற்றோர் களின் அமைதியான உலகில் இருந்து துண்டிக்கப்பட்டவராக இருந்தார். அவர் அந்த வலியுறுத்தத்தை/அயர்ச்சியை நன்கு கையாளாதிருந்தார். அவர் மட்டுமீறிக் குடித்தும் தங்களின் நேரத்தைச் சறுக்கு பலகைகளின் மீதும் செலவிட்டுக் கொண்டிருந்த மற்ற வாலிபர்களின் குழு ஒன்றில் இணைந்து கொண்டார். அவர் தமது தலையை வாரிக் கொள்ளாமல், கிழிந்த

*சட்டைகளையும், தோல் கையுறைகளையும் அணிவதை விரும்பித் தேர்ந்து கொண்டார். ஜார்ஜின் சூழ்நிலையானது வாக்குறுதியளிப்பதாகக் காணப் படாதிருந்தது. இருப்பினும் ஜார்ஜ் குறிப்பிடத்தக்க ஒரு சபையை சார்ந்திருந்தார். இளைஞர் குழுவினர் ஜார்ஜால் "மாசு படுத்தப்பட்டு" விடுவார்களோ என்று கவலைப்படுவதற்குப் பதிலாக, அந்த உள்ளூர் சபையின் உறுப்பினர்கள் அவரை எப்பொழுதும் தாங்கள் வரவேற்பதை உணரச் செய்தார்கள். அவரை அன்புகூர்ந்த அவர்கள், அவரைப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்தார்கள். அவர் அருகாமையில் அவர்கள் நின்றார்கள். ஜார்ஜை அன்புடன் வழிநடத்துதல் என்பது சில வேளைகளில் அவரை எதிர்த்து நிற்றல் என்பதை அர்த்தப்படுத்தினாலும், அவர்கள் அவரை வழிநடத்துகின்ற பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அவருக்குப் போதிக்க தாங்கள் கொண்டிருந்த ஆவியும், அவரைக் கையாளுவதில் அவர்கள் காண்பித்த ஞானமும் அவர்களின் உண்மையான அன்பைத் தெரிவித்தன.*

*கடைசியில், அவர்களின் அன்பான அணுகுமுறையானது ஜார்ஜ் ஒரு கிறிஸ்தவராகும்படி வழிநடத்திற்று. அவர் ஒரு செய்தித்தாளின் புள்ளி விவர மாகவோ அல்லது மாகாணச் சிறையின் கைதியாகவோ ஆகாதிருந்தார். கடைசியில் அவர் ஊழியத்தைப் பற்றிய முதன்மைப் பாடம் படிப்பதற்குத் தன்னை ஒரு கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொண்டார்.*

*ஒவ்வொரு சபையும் ஒவ்வொரு நபருக்கும் கூற வேண்டியதை ஜார்ஜின் சபையும் வார்த்தைகளிலும் செயல்களிலும் அவருக்குத் தெரிவித்திருந்தது: "விசுவாசிகளின் இந்த உள்ளூர் அமைப்பில் இருந்த ஒவ்வொரு உறுப்பினரும் அந்த நபர் எவ்வளவு சிறியவராக, பலவீனராக, அல்லது இடர்ப்பாடு அடைந்தவராக இருப்பினும் முக்கியமானவராக கருதப்படுவார்."[1]*

*நீங்கள் ஆராதிக்கின்ற சபையில் ஜார்ஜைப் போன்றவர்கள் அங்கம் வகிக்கின்றார்களா? நீங்கள் "ஆமாம்" என்று தலையசைக்கும் பொழுது அவர்களின் முகங்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர்களை உங்கள் சிந்தையில் நிலைநாட்டுங்கள். தேவன் நம்மை, மக்களைக் கட்டி எழுப்புபவர்களாக இருக்கும்படி அழைப்பது ஏன் என்பதை அவர்களின் உருவங்கள் நமக்குக் கூறும்.*

## முடிவுரை

*"மக்களைக் கட்டியெழுப்புபவராக" இருக்க வேண்டும் என்ற பவுலின் அறிவுறுத்தல்களுக்கு நீங்கள் எவ்விதமாகப் பதில்செயல் செய்வீர்கள்? உங்கள் வார்த்தைகளை நீங்கள் ஆராய்வீர்களா? நீங்கள் மக்களுக்குக் கூறுகின்றவைகள் அவர்களை ஆவிக்குரிய வகையில் கட்டி எழுப்புபவை களாய் உள்ளதை நிச்சயப்படுத்திக் கொள்வீர்களா? உள்ளூர் சபையின் சூழ்நிலையானது ஆரோக்கியமானதாகவும் நேர்மறையானதாகவும் இருக்க உதவுதல் என்பதை நீங்கள் உங்கள் வாழ்வின் முன்னுரிமையாக்கிக் கொள்வீர்களா? ஆம், பாவத்திலிருந்து ஓய்ந்திருக்கக் கூடிய மக்கள் நமக்குத்*

தேவை, ஆனால் அவர்களுக்கு உதவ முயற்சிப்பதற்கான நமது வழியானது வெற்றி மற்றும் தோல்விக்கு இடையில் உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடும்.

மிகவும் நடைமுறைக்கு உகந்த பின்வரும் இரு ஆலோசனைகள் (நமக்கு) உதவலாம். முதலாவது, மக்களைக் கட்டி எழுப்புபவராக இருப்பது எப்படி என்பதற்கு இயேசுவை உங்கள் உதாரணமாகக் கண்ணோக்குங்கள். சுவிசேஷங்களை மீண்டும் மீண்டும் வாசிப்பதில் தொடங்கி, மக்களுடன் அவர் உரையாடிய வழிமுறையை உற்றுக் கவனியுங்கள். இரண்டாவது, உற்சாக மூட்டுதல் என்பதைத் தனிப்பட்ட முன்னுரிமையாக இப்பொழுதே தொடங்க முடிவு செய்யுங்கள். உற்சாக மூட்டும் வார்த்தைகள் சிலரிடமிருந்து இயல்பாகவே பெருக்கெடுத்தோடுகின்றன. நம்மில் பெரும் பாலோருக்கு இதை மேற்கொள்வதற்கு உணர்வு ரீதியான முயற்சியும் நடைமுறையும் அவசியமாகின்றது, ஆனால் நாம் “மக்களைக் கட்டி எழுப்புபவர்களாய்” இருப்பதற்கு இவற்றை மேற்கொள்வது என்பது தகுதியானதாகவே உள்ளது.

---

குறிப்பு

[1]David K. Lewis, Carley H. Dodd, and Darryl Tippens, *Dying to Tell: The Hidden Meaning of Adolescent Substance Abuse* (Abilene, Tex.: ACU Press, 1992), 101-2.